செய்தி வெளியீடு எண் : 1528 நாள் : 31.07.2023

<u>செய்தி வெளியீடு</u>

**சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கூடுதல் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, கொளத்தூர்-ரெட்டேரியில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து, கொளத்தூர் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்து, அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (31.7.2023) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.6.32 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, கொளத்தூர்-ரெட்டேரியில் ரூ.21.39 கோடி செலவில் 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து, கொளத்தூர் ஏரியில் ரூ.7.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

<u>கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், **அகரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தற்போது 931 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 6 கோடியே 32 இலட்சம் மதிப்பீட்டில் 18 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, அலுவலக அறை, மொழி ஆய்வகக் கூடம், தையல் பயிற்சிக் கூடம், மனையியல் ஆய்வகக் கூடம், அறிவியல் ஆய்வகக் கூடம், நூலகம், கழிப்பறைகள், வாகனம் நிறுத்துமிடம், என தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 2,371 சதுர மீட்டர் பரப்பளவில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தொடர்ந்து, பள்ளி மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களையும், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பரிசுப் பொருட்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். பின்னர், பெரம்பூர், லூர்து மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களின் கோரிக்கையை ஏற்று, இசைக்கருவிகள் வாங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்.

**கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

திரு.வி.க.நகர் மண்டலம், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள், கல்வி உதவி, பயனாளிகளுக்கு மருத்துவ உதவி, திருமண உதவி, மாவு அரவை இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள், மீன்பாடி வண்டி, என மொத்தம் 130 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**கொளத்தூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்**

**சென்னை, கொளத்தூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அக்கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கிடும் அடையாளமாக 20 மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார்.**

இக்கல்லூரியில் B.Com., B.B.A., B.C.A., B.Sc. Computer Science ஆகிய 4 பாடப் பிரிவுகளும், சைவ சித்தாந்தம் சான்றிதழ் வகுப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது. கடந்தாண்டும் 480 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**<u>கொளத்தூர் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தல்</u>**

**கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள கொளத்தூர் ஏரியில் நீர்வளத்துறையின் சார்பில் 7 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏரியினை ஆழப்படுத்தி கரைகளை மறுசீரமைக்கும் பணிகள் மற்றும் உபரிநீர் கால்வாயினை மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**<u>கொளத்தூர் ரெட்டேரியில் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்தல்</u>**

**கொளத்தூர் ரெட்டேரி 200 அடி சாலையில் அமைந்துள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் நீர் பகிர்மான நிலையத்தில், ரெட்டேரியில் உள்ள நீரினை சுத்திகரித்து குடிநீராக்கும் திட்டத்தின் கீழ், 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 1 கோடி லிட்டர் திறன் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

ஏரியின் நீர் புதியதாக அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நவீன கரைந்த காற்று மிதப்பிலான (Dissolved Air Flotation) தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப்படுகிறது. அடுத்து, இரண்டு நிலை திட வடிகட்டிகள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு, இறுதியாக குளோரினேஷன் செய்து பாதுகாப்பான குடிநீர், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும். இத்திட்டத்தில், நீர் சுத்திகரிப்பிற்காக ஏரியில் மிதக்கும் நீர் உந்து நிலையம், புதிய நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 1.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இத்திட்டத்தின் மூலம் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குமரன் நகர், வேலவன் நகர், பெரியார் நகர், ஜவகர் நகர், திருப்பதி நகர், கம்பர் நகர், அஞ்சுகம் நகர், ஜி.கே.எம். காலனி, செம்பியம் மற்றும் பல்லவன் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 1 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் திரு. ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., இந்துசமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. க.வீ. முரளீதரன், இ.ஆ.ப., அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பி. விஜயகுமார் ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in